


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.6.2023) சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 50,202 பயனாளிகளுக்கு ரூ.170.31 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சேலம் மாநகராட்சி மேயர் ஆர்.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் பொன்.கௌதம் சிகாமணி, எஸ்.ஆர்.பார்த்திபன், ஏ.கே.பி.சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வ.தட்சிணாமூர்த்தி, நகராட்சி நிர்வாக இயக்குநர் பா.பொன்னையா, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், சேலம் மாநகராட்சி ஆணையர் எஸ்.பாலசந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.6.2023) சேலம் மாவட்டம், மேட்டூர் செல்லும் வழியில் நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம் கோனூர் ஊராட்சியில் உள்ள பெரியார் நினைவு சமத்துவபுரக் குடியிருப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு வசிப்பவர்களிடம், வசதிகள் குறித்து கேட்டறிந்தார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், ஆகியோர் உள்ளனர்.



சேலம், அஸ்தம்பட்டி ஆய்வு மாளிகையில், நேற்று (11.06.2023) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அய்யம்பெருமாள்பட்டியை சேர்ந்த திருமதி கண்ணம்மாள் என்பவரின் நீண்ட நாள் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

கோனூர் ஊராட்சியில் உள்ள

# தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

சேலம், ஜூன்.12-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.6.2023) சேலம் மாவட்டம், மேட்டூர் செல்லும் வழியில், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சியில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு வகிக்கும் மக்களிடம் வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

சேலம் மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள் மற்றும் இன்று மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்து விடும் நிகழ்வு ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் மாலை (10.6.2023) சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் அவர்கள், நேற்று காலை (11.6.2023) சேலம் மாநகரில் உள்ள பேரறிஞர் அண்ணா பூங்காவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை திறந்து வைத்து, சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து நேற்று மாலை சேலம் மாவட்டம், மேட்டூர் செல்லும் வழியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1998 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சியில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அச்சமத்துவபுரத்தை சீரமைத்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்பேரில் 2021 2022ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.47 இலட்சம் செலவில் 94 வீடுகளுக்கு வெள்ளை அடித்தல் மற்றும் சிறு பழுது நீக்கப் பணிகளும், ரூ.44.20 இலட்சம் செலவில் சாலை வசதி, குடிநீர் வசதி, விளையாட்டு மைதானம், சமுதாயக்கூடம், அங்கன்வாடி மையம், நியாய விலைக்கடை, சமத்துவபுர வளைவு ஆகிய இதர பொது கட்டமைப்புகளுக்கான பழுது நீக்கப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

முதலமைச்சர் அவர்கள் நேற்று சமத்துவபுரத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தபோது, சமத்துவபுரத்தில் வசிக்கும் மக்களிடம் அங்குள்ள சாலை வசதி, குடிநீர் வசதி போன்ற வசதிகள் குறித்து கேட்டறிந்தார். அப்போது, அம்மக்கள் அனைத்து வசதிகளும் சிறப்பாக உள்ளதாகவும், சமத்துவபுரத்தை சீரமைத்திட நடவடிக்கை எடுத்தமைக்காக தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அரிக்கொம்பன் யானை பற்றிய தற்போதைய நிலை!

## தலைமை வனப் பாதுகாவலர் அறிக்கை!

சென்னை, ஜூன்.12-

அரிக்கொம்பன் பற்றிய தற்போதைய நிலை குறித்து தலைமை வனப்பாதுகாவலர் செய்தி வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து தலைமை வனப்பாதுகாவலர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு :

தேனி மாவட்டத்தில் கடந்த வாரம் பிடிக்கப்பட்ட அரிக்கொம்பன் யானை களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பத்திற்கு உட்பட்ட மேல் கோதையாறில் உள்ள குட்டியார் அணைப்பகுதியில் விடப்பட்டது. அரிக்கொம்பன் யானையானது தற்பொழுது நல்ல உடல்நலத்துடன் சீரான உணவு மற்றும் நீர் எடுத்துக் கொள்கிறது. யானையின் நடமாட்டத்தினை களக்காடு, அம்பாசமுத்திரம் மற்றும் கன்னியாகுமரி வனக்கோட்ட பணியாளர்கள் இரவு பகலாக கண்காணித்து வருகின்றனர்.

ஜூன் 6 ஆம் தேதி முதல் வன உயர் அதிகாரிகள், கால்நடை மருத்துவக்குழு, முன்களப் பணியாளர்கள் உள்ளடக்கிய மொத்தம் 6 குழுக்கள் அரிக்கொம்பன் கழுத்தில் பொறுத்தப்பட்டுள்ள ரேடியோ காலர் தொழில்நுட்பம் மூலம் யானையின் நடமாட்டம் துல்லியமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

வனத்துறை சார்பாக யானைக்கும், பொதுமக்களுக்கும் தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

சென்னை தெற்கு திட்டம்-11 – கே.பாண்டுரங்கன் தலைமை!

# மின் கழக தொ.மு.ச. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## மின் கழக தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 12-

தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் - சென்னை தெற்கு திட்டம் - 11-இன் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா 14.6.2023-புதன் கிழமை அன்று காலை 10.30 மணிக்கு, தாம்பரம் செயற் பொறியாளர் அலுவலகத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு திட்டத் தலைவர் கே.பாண்டுரங்கன் தலைமை வகிக்கிறார். திட்டச் செயலாளர் எஸ்.குகாநந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

ஏ.குமாரசாமி, எஸ்.பார்த்திபன், ஆர்.சம்பத் குமார், ஆர்.எஸ்.ஜெயவேல், ஜி.சத்திய நாராயணன், ஜி.மதிவாணன், எஸ்.ராஜ்குமார், வி.சிவபிரகாசம், எஸ்.ரவி, எஸ்.கரிகாலன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சங்கக் கொடியை மின் கழக தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் ஏற்றி வைத்து சிறப்பிக்கிறார்.

தாம்பரம் மேற்கு உதவி பொறியாளர் ஆர்.ராஜன் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்குகிறார்.

இதில் பி.முருகன், எஸ்.ரமேஷ், ஜி.ராஜேந்திரன், ஜி. ரவீந்திரன், பி.விஜயகுமார், ஜெ.பாபு, கே.விஜயகுமார், என்.கோவிந்தசாமி, எஸ்.சாம்சன், செல்வகுமார், கே.கோகுல், வி. வினோத்குமார், பி.பிரபாகரன், எம்.கேசவன், கே. நெடுஞ்செழியன், பி.சந்திர மோகன், கே.முருகன், சீனிவாசன், கே.நேதாஜி, ஜி. சுதாகர், எம்.ராஜா, இ.சீனிவாசன், டி.ஜானகிராமன், ஏ.லோகநாதன், என்.கோகுலகிருஷ்ணன், டி.சாய் சுரேஷ், பி.கோபிநாத், எம். அசோக், பி.ராஜேஷ், எஸ். மாலதி மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

பி.முரளிதரன் நன்றி கூறுகிறார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 32.வது வட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஏழை எளியோருக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்தும் ஏழை எளிய மக்களுக்கு பிரியாணியும் வழங்கினார். இந்நிகழ்ச்சியை 32வது வட்ட கழக செயலாளர் எம்.சரவணன் ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் ஜி.துக்காராம் எம்.சி., மாதவரம் மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால் எம்சி, இ.ஏழுமலை எம்சி, டி.சுந்தரம், பகுதி நிர்வாகிகள் திருமதி தேவி கௌதமன், டி. ரமணன், எம்.செல்வம், ஏ.விஜயலட்சுமி ஆனந்த் வட்ட கழக நிர்வாகிகள் கே.பத்மநாபன், கௌதம் பாலாஜி, ஆர்.தேவன், எஸ்.ஹேமாவதி, எம்.சேகர், சி.எல்.உதயக்குமார், ஜே.நரசிம்மன், வி.கௌதமன் மற்றும் அனைத்து கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஜெ.சண்முகம் தலைமை! க.செல்வம் எம்.பி – வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# மறைமலைநகர் நகர தி.மு.க. சார்பில் நலஉதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

## ஆ.இராசா எம்.பி – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜூன்.12 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மறைமலைநகர் நகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (12.6.2023 - திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு, பாலாஜி திருமண மண்டபம் அருகில், பாவேந்தர் சாலை, மறைமலை நகரில் நடைபெறுகிறது.

மறைமலைநகர் நகரச் செயலாளரும் , நகரமன்ற தலைவர் ஜெ.சண்முகம் தலைமை வகிக்கிறார்.

நகர தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஜெ.லோகேஷ் வரவேற்புரை ஆற்றுகிறார்.

சு.சுப்பிரமணி, ர.சீனிவாசன், த.வினோத்குமார், தேவி கோகுலகிருஷ்ணன், வே.வெங்கட், மு.கண்ணன், வி.ஸ்ரீராம், மா.முனுசாமி, ராஜேந்திரன், க.செல்வகுமார், வழக்கறிஞர் சிவக்குமார், ப.பார்த்த சாரதி, சிவ.பரணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ, எஸ்.ஆராமுதன், பி. சந்தானம், டி.மூர்த்தி, எம். கே.டி.கார்த்திக், சித்ரா கமலக்கண்ணன், எஸ்.ஆல்பர்ட், அரங்க கிரிச்சந்திரன், இரா.அசோகன், ஆர்.கருணாநிதி, வெ.சுந்தர், கே. ஜே.உதயகுமார், என். கோபால், குட்டி (எ) கி.யுவராஜ், ப.ஜெயக்குமார், ஆ. குணசேகரன், ரா.ரவி, க.சரவணன், து.ரமேஷ், து.கேசவன், ச.லெனின், ரா.செந்தில், கி.ஏழுமலை, ர.நித்தியானந்தம்,

க.அஸ்வின், லோ.தனசேகரன், த.சக்ரவர்த்தி, டி.ஸ்டாலின், ஜெ. சுரேஷ் குமார் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்கள், நகர கழக அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பா ளர்கள், வார்டு கிளை நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நகர இளைஞர் அணி அமைப்பாளர் டி.கே.கமலக் கண்ணன் நன்றி உரை ஆற்றுகிறார்.

மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில்

# எழும்பூர் வடக்கு பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்!

## நா.எழிலன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்! க.வினோத் தலைமை!

சென்னை, ஜூன். 12

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டு "உடலை நலமாக்குவோம்! உயிரை நலமாக்குவோம்!" எனும் தலைப்பில் மாபெரும் மருத்துவ முகாம் (11.6.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணிக்கு, மெட்ரிக் மகளிர் மேல்நிலைப்பள்ளி, பொன்னன் தெரு, புரசைவாக்கத்தில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் க.வினோத் தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு , சொ.வேலு, வி.சுதாகர், சி. மகேஷ்குமார், பரிதி இளம் சுருதி, கே.எஸ்.எம்.நாதன், கோ.ஏகப்பன், புனிதவதி எத்திராசன், புரசை கோ. மணி, புரசை ஜி.தாமோதரன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், கே.கோகுல், க.நந்தீஸ்வரன், அ.நிர்மலாதேவி, எல்.சுந்தரராஜன், சே.பாலாஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் கழக மருத்துவ அணிச் செயலாளர் நா.எழிலன் மருத்துவ முகாமை துவக்கி வைத்தார்.

இதில் மேயர் பிரியா ராஜன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, வட்டக் கழகச் செயல்வீரர்கள் சு.மனோகர், ந.பாலு, வி.அபாய், தி.தயாளன், வி.விஜயகுமார், ஆர்.பாபு, வான்மதி கதிரவன், டால்பின் எஸ்.அரி, இ.மொய்தீன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வட்டச் செயலாளர்கள் ஆர்.எம்.ரங்கநாதன், சி. சேகர் ஆகியோர் நன்றி கூறினர்.

கொடி கே.பாலா நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# 168 அ வட்டம் கிண்டியில் தண்ணீர் பந்தல்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன் 12 -

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்குப்பகுதி 168 அ வட்டம் கிண்டி பேருந்து நிலையம் அருகில் அறிவாலயம் கொடி கே.பாலா நிகழச்சி ஏற்பாட்டில் 270 லிட்டர் கொள்ளளவு உள்ள தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தலை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சைதை கிழக்குப் பகுதி செயலாளர் 13-வது மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ் எம்.சி., மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், 168 மாமன்ற உறுப்பினர் தா. மோகன்குமார் எம்.சி., 168-வது வட்ட கழக செயலாளர் நா.ராதாகிருஷ்ணன், ச.சேகர், கோ.தனசேகரன், ஆர்.கிருஷ்ணகுமார், ஏ.சீனிவாசன், ஜி.என்.நாராயணன், பார்சன் கே.லோகு, பி.ஆகாசம்,

முத்துமாரி யப்பன், ஜி. வெங்கடேஷ், கே. சிவாஜி, டி . இ ளை ய ரா ஜா , கி.சிவபிரகாஷ், குணாமேகநாதன், ஜே.தவமணி, எம். எஸ்.எம்.சேக், வா.கதிர்வேல், குருமூர்த்தி, எம். ஸ்ரீதர், க.ஆதிகேசவன், க. ஆறுமுகம், குணாகுருமூர்த்தி, சி.செல்வதுரை மற்றும் கழக செயல்வீரர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திருவள்ளூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில்

# கலைஞர் நூற்றாண்டு கூட்ட அரங்கம்!

## ஒன்றிய தலைவர் ஜெயசீலி ஜெயபாலன் திறந்து வைத்தார்!

திருவள்ளூர், ஜூன்.12

திருவள்ளூர் ஊராட்சி ஒன்றிய குழு கூட்டம் ஒன்றிய அலுவலகத்தில் உள்ள மன்ற கூடத்தில் நடைபெற்றது. ஒன்றிய குழு தலைவர் ஜெ.ஜெயசீலி ஜெயபாலன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் எம்.பர்கத்துல்லாகான், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெ. மாணிக்கம், ஸ்டாலின், மேலாளர் (நிர்வாகம்) சுந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்தக் கூட்டத்தில் 15வது நிதி குழு மானிய நிதியிலிருந்து குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், மழைநீர் கால்வாய்கள், அங்கன்வாடி கட்டிடங்கள் சிமெண்ட் சாலைகள் பேவர் பிளாக் சாலைகள் அமைப்பதென்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக திருவள்ளூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கலைஞர் கூட்ட அரங்கத்தை ஒன்றிய பெருந்தலைவர் ஜெயசீலி ஜெயபாலன் திறந்து வைத்து பார்வையிட்டார்.

இதில் ஒன்றியக் குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், எஸ்.வேலு, எல்.சரத்பாபு, கே.விமலாகுமார், டி.கே. பூவண்ணன், டி.சாந்திதரணி, கே.ஆர்.வேதவல்லி சதீஷ்குமார், வ.ஹரி, ஆர். திலீப்ராஜ், அ.நவமணி ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு கூட்ட அரங்கத்தை ஒன்றிய குழு பெருந்தலைவர் ஜெயசீலி ஜெயபாலன் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பார்வையிட்டார். அருகில் துணைத் தலைவர் எம்.பர்கத்துல்லாகான், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெ.மாணிக்கம், ஸ்டாலின், மேலாளர் (நிர்வாகம்) சுந்தர்ராஜன், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், எஸ்.வேலு, எல்.சரத்பாபு, கே.விமலாகுமார், டி.சாந்திதரணி, அ.நவமணி, கே.ஆர்.வேதவல்லி சதீஷ்குமார், வ.ஹரி, ஆர்.திலீப்ராஜ், டி. கே.பூவண்ணன் உள்பட பலர் உள்ளனர்.